**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**MCOP.No.163/2020- PW-1**

| | |
|---|---|
| Name | திருமதி.ஈஸ்வரி |
| Husband/Father Name | திரு.ராதாகிருஷ்ணன் |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **17.03.2026.**

**முதல் விசாரணை தொடர்ச்சி:-**

இராணிப்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.753/2008 வழக்கில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் **ம.சா.ஆ.1** ஆகும். 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு உண்மை நகல் **ம.சா.ஆ.2** ஆகும். TN-23-AP-1315 வாகனத்தின் பதிவு சான்று உண்மை நகல் **ம.சா.ஆ.3** ஆகும். சி.எம்.சி மருத்துமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரி **ம.சா.ஆ.4** ஆகும். என் கணவர் ராதாகிருஷ்ணனின் பிரேத பரிசோதனை அறிக்கை **ம.சா.ஆ.5** ஆகும். என் கணவர் ராதாகிருஷ்ணனின் வாரிசு சான்று இணையதள பதிவிறக்க நகல் **ம.சா.ஆ.6** ஆகும். மனுதாரர்களின் ஆதார் அடையாள அட்டை நகல்கள் **ம.சா.ஆ.7** ஆகும். மனுப்படி உத்தரவாக வேண்டிக்கொள்கிறேன்.

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. சம்பவம் பற்றி கேள்விப்பட்டேன். என் கணவர் நடந்து செல்லும் போது விபத்து ஏற்பட்டுள்ளது. சாலையின் வரும் வாகனங்களை கவனிக்காமல் என் கணவர் தான் கவனக்குறைவாக சாலையை கடந்துள்ளதால் விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் கணவரின் அஜாக்கிரதையால் அவரே விபத்திற்கு காரணமாக இருந்துள்ளதால் தான் விபத்து சம்மந்தமான குற்ற வழக்கில் போலிசார் தயார் செய்த மாதிரி வரைபடத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் மர வேலை செய்து மாதம் ரூ.12,000/- சம்பாதித்து வந்தார் என்பதை காண்பிக்க நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் என் கணவரின் வேலை மற்றும் வருமானம் குறித்து மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானது என்றால் சரியல்ல. என் கணவர் மீது மோதியதாக நான் சொல்லும் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த நபரின் ஓட்டுநர் உரிமமும், அந்த வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த நபருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லாததை தெரிந்து தான் நான்

அவரது ஓட்டுநர் உரிம நகலையும், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 1-ம் எதிர்மனுதாரர் காப்பீடு நிபந்தனைகளை மீறி வாகனத்தை ஓட்டுநர் உரிமம் இல்லாத நபரிடம் கொடுத்து மோட்டார் சைக்கிளை இயக்கியுள்ளதால் 1-ம் எதிர்மனுதாரர் மட்டுமே எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளார் என்றாலும், 2-ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தை பொருத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. எது எவ்வாறாயினும் நான் மனுவில் கேட்டுள்ள இழப்பீடு தொகை மிகவும் அதிகப்படியானது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.